www.penakural.com மலர்: 02 இதழ்: 07 மே 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்

RNI No.:
TNTAM / 2022 / 85375

Scan and visit the website






# Subzero Cool Tech

## AC REPAIR SERVICE & RENT

**AT YOUR DOOR STEP**

- AC REPAIR
- INSTALLATION
- MAINTENANCE
- AMC SERVICE

**We Repair all Brands**




CONTACT US

Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil, Mettukuppam,
Chennai - 600097.

SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# பேனா குரல்
## PENA KURAL
தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 02 இதழ்: 07 மே 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-


உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர்:
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், M.சந்திரசேகர், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், ம.திலிப் குமார், பா.சரவணன், K.மாரிதுரை, A.தங்கராஜ்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், தமிழ்மணி, கா.கலைமணி, தி.பாமா, அன்பு மணி, s.பிரகாசம், இளைய தர்ஷினி, பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி**

புகைப்பட நிருபர்கள்:
**வா.கவியரசன், கா.மிதுன் சாய்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. நாகராஜ்**, B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123


நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
**3/885, பிள்ளையார் கோவில் தெரு, மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை, தமிழ் நாடு, இந்தியா - 600097.**

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com


* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*


தலையங்கம்

# இயற்கையை அழிக்கலாமா?

ஆசிரியர் குரல்

உலகின் மொத்த நிலப்பரப்பில் 2.4 சதவீதத்தைத்தான் இந்தியா கொண்டிருக்கிறது எனினும் இங்கு மட்டுமே 47,513 தாவர வகைகள் இருக்கின்றன. அதாவது உலகில் இதுவரை அறியப்பட்ட சுமார் 0.4 மில்லியன் தாவரங்களில், 11.4% இந்தியாவில் இருக்கின்றது. இவற்றில் 28% இந்தியாவில் மட்டுமே காணப்படும் எண்டெமிக் வகையை சேர்ந்தவை.

உலகின் மலரும் வகை தாவரங்களில் 6% இந்தியாவில் இருக்கிறது. பலவகையான அரிய தாவரங்களை கொண்டிருப்பதால் உலகின் மூலிகைப் பூங்கா என்று அழைக்கப்படும் இந்தியாவின் வளங்களிலிருந்து பல தாவரங்களை கடந்த காலங்களில் முழுவதுமாக இழந்திருக்கிறோம் மேலும் பல அரிய தாவரங்கள் மிக வேகமாக அழிந்துகொண்டிருக்கின்றன.

நகரமயமாக்கல், காடுகள் அழிக்கப்பட்டு விவசாய நிலங்களாவது சுரங்கங்கள் உள்ளிட்ட காரணங்களினால் மட்டுமல்லாது தாவரகுருடினாலும் இவை அழியும் அபாயத்தில் உள்ளன. பல வளர்ந்த நாடுகளில் களைச்செடிகள் அரசுடமையாக்க பட்டிருக்கின்றன. சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளில் எந்த செடியையும் யாரும் அனுமதியின்றி பறிக்கவோ, அகற்றவோ, பயன்படுத்தவோ முடியாது இப்படி கடுமையான சட்டங்கள் மூலம் தாவரங்கள் பாதுகாக்கப்படவேண்டிய வந்ததே தாவரக் குருட்டுத்தன்மையால்தான்

1999ல் தான் J. H. Wandersee & E. E. Schussler என்னும் இரு அமெரிக்க தாவரவியலாளர்களால் தாவர குருடு “plant blindness” என்னும் சொல் உருவாக்கப்பட்டது.

இப்போதைய விரைவான வாழ்க்கையில் நிலவோ மழையோ வெயிலோ நம்மை கடக்கும் சிறு பறவைகளோ எதையும் கவனிக்க நேரமில்லாதவர்களாகிப்போன நம்மில் பலரும் மிக நெருக்கடியான சாலை போக்குவரத்தில் பல மணி நேரம் காத்திருக்கும் போது கூட சாலையோரங்களில் நிழலும் குளிர்ச்சியும் அளிக்கும், அழகிய மலர்களுடன் கண்ணைக்கவரும் படி நின்றிருக்கும் பலவிதமான மரம், செடி கொடிகளை கவனிப்பதில்லை.

சாலை விரிவாக்கத்தின் பேரில் பெருமரங்கள் இயந்திர ரம்பங்கள் கொண்டு வெட்டி அகற்றப் படுகையிலும் அங்கே சாலையை கடக்க காத்திருப்போர் பல வருடங்கள் வளர்ந்து பயன் தந்து கொண்டிருந்த மரங்களை இழப்பதைக் குறித்தும், அங்கு நடப்பது படுகொலைக்கு சமம் என்பதையும் உணர்வதில்லை. மரங்களும் உயிருள்ளவைதான்.அவை ரத்தம் பெருக்கி கதறுவதில்லை எனவே அவற்றை அழிப்பது யார் கவனத்துக்கும் வருவதில்லை.

கோடைக்காலங்களில் குடிநீர் பற்றாக் குறைக்கு காலிக்குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டு இருக்கும் பலரில் ஒருவர் கூட பல நூறு மரங்கள் வெட்டப்படுகையில் அதை கண்டிக்க நினைப்பதில்லை. ஏனெனில் குடிநீருக்கும் மரங்களின் எண்ணிக்கைக்கும் இருக்கும் நேரடி தொடர்பு தெரியாத அளவிற்கு தாவர குருடாக இருப்பதுதான். தாவர குருடு என்பது நாம் முழுக்க முழுக்க நமது அடிப்படை – **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்

# மத அடிப்படையில் இட ஒதுக்கீடு கொண்டு வர மாட்டோம் என காங்கிரஸ் எழுதிக் கொடுக்க தயாரா? மோடி ஆவேசம்!

மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கமாட்டோம் என எழுத்துப் பூர்வமாக அறிவிக்க தயாரா என காங்கிரஸ் கட்சிக்கும், இந்தியா கூட்டணிக்கும் சவால் விடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. நாடு முழுவதும் லோக்சபா தேர்தல் 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக தமிழ்நாடு, புதுச்சேரி உள்பட 21 மாநிலங்களில் உள்ள 102 தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 19ஆம் தேதி லோக்சபா தேர்தல் நடந்தது. இதையடுத்து 2வது கட்டமாக ஏப்ரல் 26ஆம் தேதி கேரளா, கர்நாடகா உள்ளிட்ட 13 மாநிலங்களில் உள்ள 88 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது.

மூன்றாம் கட்டமாக வரும் மே 7ஆம் தேதி 94 லோக்சபா தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. மூன்றாம் கட்ட தேர்தலில் குஜராத்தில் உள்ள 26 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. ஜூன் 1 ஆம் தேதி வரை இன்னும் 5 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. ஜூன் 4ஆம் தேதி ஒட்டுமொத்தமாக வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

தேர்தல் பிரச்சாரம் திவிரமாக நடைபெற்று வரும் நிலையில், இட ஒதுக்கீடு தொடர்பாக பாஜகவும், காங்கிரஸ் கட்சியும் மாறி மாறி கடுமையாக விமர்சித்து வருகின்றன. பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இட ஒதுக்கீட்டை அகற்றிவிடும் என காங்கிரஸ் தலைவர்கள் கூறி வருகின்றனர்.

அதேசமயம், வாக்கு வங்கியை வலுப்படுத்த மதத்தின் அடிப்படையில் நேர்மையற்ற முறையில் இட ஒதுக்கீட்டை வழங்க காங்கிரஸ் முயற்சிக்கிறது. நான் உயிருடன் இருக்கும் வரை தலித், பழங்குடியின மற்றும் ஓ.பி.சி இட ஒதுக்கீட்டை குறைத்து முஸ்லிம்களுக்கு மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கவிடமாட்டேன் என பிரதமர் மோடி பேசி வருகிறார்.

இந்நிலையில் குஜராத் மாநிலம் பனஸ்கந்தா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகையில், “2014 லோக்சபா தேர்தலின்போது ஒரு டீக்கடைக்காரரால் நாட்டிற்கு என்ன செய்ய முடியும்? என காங்கிரஸ் தொடர்ந்து விமர்சித்து வந்தது. ஆனால், காங்கிரஸுக்கு தேர்தலில் சரியான பதிலடியை இந்த நாடு வழங்கியது.

2019ஆம் ஆண்டு பாஜக ஆட்சியை தக்க வைக்காது என எதிர்க்கட்சியினர் கூறினர். 2019ல் மக்கள் பாஜகவுக்கு வாக்களித்து அமோக ஆதரவு தெரிவித்தனர். எனது மூன்றாவது பதவிக்காலத்தில் நாடு உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறும்.



பட்டியலின, பழங்குடியின மற்றும் ஓபிசி மக்களுக்கு அரசியல் சாசனத்தில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது, அதை யாரும் பறிக்க முடியாது. பாஜக இருக்கும் வரை இடஒதுக்கீடு பாதுகாக்கப்படும். நரேந்திர மோடி உயிருடன் இருக்கும் வரை மத அடிப்படையில் இட ஒதுக்கீடு என்ற விளையாட்டை விளையாட விட மாட்டேன்.

இன்று, காங்கிரஸ் கட்சியின் இளவரசருக்கும், அவரது கட்சிக்கும் நான் சவால் விட விரும்புகிறேன். அரசியலைப்போடு விளையாடமாட்டோம் அல்லது மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கமாட்டோம் என அறிவிக்க வேண்டும். மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க மாட்டோம் என்று காங்கிரஸ் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

ஒட்டுமொத்த மோடி மற்றும் ஓபிசி சமூகத்தினரையும் திருடர்கள் என்று அழைத்தார் காங்கிரஸ் இளவரசர். தற்போது 2024ல், பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இட ஒதுக்கீடு முடிவுக்கு வரும் என்ற புதிய பொய்யை காங்கிரஸும், இந்தியா கூட்டணியும் பரப்பி வருகின்றனர்.

காங்கிரஸ் கட்சிக்கு எந்தவித தொலைநோக்குப் பார்வையும் கிடையாது, நாட்டு மக்களுக்கு சேவை செய்வதற்கான ஆர்வமும் இல்லை. ஆனால், நாங்கள் ஏழைகள் மற்றும் விவசாயிகளின் நலன் மேம்பாட்டிற்காக புதிய திட்டங்களை கொண்டு வர உள்ளோம்“ எனப் பேசியுள்ளார் பிரதமர் மோடி.

# இடஒதுக்கீட்டை நீக்குவதுதான் பா.ஜ.க வின் பிரச்சார மந்திரம்:

## ராகுல் காந்தி




மக்களவைத் தேர்தல் நாடு முழுவதும் கடந்த ஏப்ரல் 19 துவங்கியது. இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் 26 நடைபெற்றது. அடுத்தகட்ட வாக்குப்பதிவு வருகிற மே 6 நடக்கிறது. இந்நிலையில், தலைவர்கள் பிரச்சாரத்தில் பேசி வரும் விஷயங்கள் மக்கள் மத்தியில் அதிக கவனத்தை ஈர்த்து வருகிறது.

அண்மையில், பிரதமர் மோடி ராஜஸ்தான் மாநில பிரச்சாரக்கூட்டத்தில் பேசியபோது, காங்கிரஸ் கட்சியை தாக்கி பேசினார். மேலும், அப்போது பேசிய அவர், இஸ்லாமியர்களை ஊடுருவல்காரர்கள் என்றும் அதிக பிள்ளைகளை பெற்றுக்கொள்பவர்கள் என்றும் பேசி இருந்தார்.

மேலும், காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்து அவர்கள் ஆட்சியை பிடித்துவிட்டால், ஹிந்துக்களின் சொத்தை இஸ்லாமியர்களுக்கு கொடுத்துவிடுவார்கள் என்றும், பெண்களின் தாலிக்கூட மிஞ்சாது என்றும் சர்ச்சையாக பேசியிருந்தார். இதற்கு, காங்கிரஸ் கட்சி தலைவர்கள் பதிலடி கொடுத்து இருந்தார்கள்.

இந்நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவரும் கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் போட்டியிட்ட ராகுல் காந்தி அவரது எக்ஸ் தளத்தில், மோடியின் ஆட்சியில் பறிபோன அரசு பணி குறித்து பகிர்ந்திருக்கிறார். அதில், "இடஒதுக்கீட்டை நீக்குவதுதான் நரேந்திர மோடியின் பிரச்சார மந்திரம். மூங்கில் இல்லையென்றால் புல்லாங்குழல் இசைக்காது. அப்படியே, அரசு வேலை இல்லையென்றால், இடஒதுக்கீடும் கிடைக்காது..



குருட்டுத்தனமாக அரசு வேலைகளை தனியார்மயமாக்கல் செய்ததன் மூலம் அரசு வேலைகளை ஒழித்துவிட்டு, தலித்துகள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் இடஒதுக்கீட்டை பாஜக அரசு ரகசியமாகப் பறித்து வருகிறது. 2013ல், பொதுத்துறையில் 14 லட்சம் நிரந்தரப் பணியிடங்கள் இருந்தது, ஆனால், 2023ல் 8.4 லட்சமாக மட்டுமே இருந்தது.

BSNL, SAIL, BHEL போன்ற உயர்மட்ட பொதுத்துறை நிறுவனங்களை அழித்ததன் மூலம், பொதுத் துறையில் மட்டும் கிட்டத்தட்ட 6 லட்சம் நிரந்தர வேலைகள் நீக்கப்பட்டன. ரயில்வே போன்ற நிறுவனங்களிலும் ஒப்பந்த முறையில் வேலையைக் கொடுக்கப்பட்டு வருகின்றது. தனியார்மயமாக்கல் என்னும் மோடியின் மாடல் நாட்டின் வளங்களை கொள்ளையடித்து அழிப்பது.. இதன் மூலம் தாழ்த்தப்பட்டவர்களின் இடஒதுக்கீடு பறிக்கப்படுகிறது.

30 லட்சம் காலியாக உள்ள அரசுப் பணியிடங்களை நிரப்புவதன் மூலம், பொதுத் துறைகளை வலுப்படுத்தி, சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் வேலைவாய்ப்புக்கான கதவுகளைத் திறப்போம் என்னும் உத்திரவாதத்தை காங்கிரஸ் உங்களுக்கு கொடுக்கிறது" என அவரது பதிவில் ராகுல் காந்தி குறிப்பிட்டு இருக்கிறார்.

# வறட்சியால் தகிக்கும் விவசாயி! மின்சாரத்தை வழங்காமல் தமிழக அரசும் தாக்குதல் நடத்தி வருவது கண்டிக்கத்தக்கது

## பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்

தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள வறட்சி மற்றும் தகிக்கும் வெப்பத்துக்கு காவிரி பாசன மாவட்டங்களும் தப்பவில்லை. பல லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கோடைக்கால பயிர்களை நிலத்தடி நீரைக் கொண்டு காப்பாற்ற உழவர்கள் போராடி வரும் நிலையில், அதற்குத் தேவையான மும்முனை மின்சாரத்தை வழங்காமலும், மின்வெட்டை நடைமுறைப்படுத்தியும் தமிழக அரசும் தாக்குதல் நடத்தி வருவது கண்டிக்கத்தக்கது என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்," காவிரி பாசன மாவட்டங்களில் பல லட்சம் ஏக்கரில் கோடைக்கால சாகுபடியாக நெல் பயிரிடப்பட்டு உள்ளது. நெல் தவிர கரும்பு, வாழை, பருத்தி, உளுந்து, எள், சோளம், பச்சைப்பயறு, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களும் பயிரிடப்பட்டுள்ளன.

குறுவை மற்றும் சம்பா பருவ பயிர்களுக்கே மேட்டூர் அணையில் இருந்து காவிரியில் தண்ணீர் திறந்து விடப்படாத நிலையில், கோடைக்கால பயிர்களுக்கு காவிரி நீர் கிடைக்காது என்பது உழவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும், நிலத்தடி நீரைக் கொண்டு கோடைக் கால சாகுபடி செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் பல பயிர்களை பயிரிட்டிருக்கின்றனர்.

ஆனால், மும்முனை மின்சாரம் வழங்காதது, அடிக்கடி மின்வெட்டை நடைமுறைப்படுத்துவது போன்ற



செயல்களால் உழவர்களின் கனவுகளையும், நம்பிக்கையையும் தமிழக அரசும், மின்சார வாரியமும் சிதைத்திருக்கின்றன. காவிரி பாசன மாவட்டங்களில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்பது தான் உழவர்களின் எதிர்பார்ப்பு ஆகும். மும்முனை மின்சாரத்தை நாள் முழுவதும் வழங்க முடியாவிட்டாலும் தினமும் 14 மணி நேரம் தடையின்றி மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. ஆனால், தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருச்சி, பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒட்டுமொத்தமாக 6 மணி நேரம் கூட மும்முனை மின்சாரம் வழங்கப்படுவதில்லை. விட்டு விட்டு வரும் மின்சாரமும் எப்போது வரும்? என்பது குறித்த முன்னறிவிப்பையும் தமிழ்நாடு மின்சார வாரியம் வெளியிடுவதில்லை.

காவிரி பாசன மாவட்டங்களின் எந்தப் பகுதியிலும் கடந்த இரு மாதங்களில்



தொடர்ச்சியாக 3 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை என்பது தான் உண்மையாகும். கடுமையான வறட்சி காரணமாக காவிரி பாசன மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் பல நூறு அடி கீழே சென்று விட்டது. அதனால், உழவர்கள் அதிக குதிரைத்திறன் சக்தி கொண்ட நீர் இறைப்பான்களை பயன்படுத்தி வருகின்றனர். ஆனாலும், கூட அவற்றின் மூலம் குறைந்த அளவிலேயே தண்ணீர் எடுக்க முடிகிறது.

பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும் என்றால் மும்முனை மின்சாரம் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்; அதுவும் தொடர்ச்சியாக 4 அல்லது 5 மணி நேரம் மின்சாரம் வந்தால் தான் குறிப்பிட்ட பரப்பளவிலாவது தண்ணீரை பாய்ச்ச முடியும். 2 அல்லது 3 மணி நேரத்திற்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டால் அதனால் பயனில்லை. அதைக் கொண்டு பயிர்களுக்கு தண்ணீரைப் பாய்ச்ச முடியாது.

அதைவிடக் கொடுமை என்னவெனில், காவிரி பாசன மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு மும்முனை மின்சாரமே வழங்கப்படுவதில்லை என்பது தான். அந்தப் பகுதிகளில் வழங்கப்படும் இருமுனை மின்சாரத்தைக் கொண்டு அதிக சக்தி கொண்ட நீர் இறைப்பான்களை இயக்க முடியாது. அதனால், அப்பகுதிகளில் உள்ள உழவர்கள் பயிர்களைக் காப்பாற்ற முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். தினமும் குறைந்தது 12 மணி நேரமாவது தடை-யின்றி மும்முனை மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி காவிரி பாசன மாவட்டங்களின் பல பகுதிகளில் உழவர் அமைப்புகளின் சார்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், உழவர்களுக்கு விடியல் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவி வரும் சூழலில், அதன் பாதிப்புகளை குறைக்க வேண்டியதும், கோடைக்கால பயிர்களைக் காப்பாற்ற வேண்டியதும் அரசின் கடமை ஆகும். ஆனால், அதற்காக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாத தமிழக அரசு, இதுவரை வழங்கப்பட்டு வந்த மும்முனை மின்சாரத்தை நிறுத்தியும், குறைத்தும் உழவர்களின் துயரத்தை அதிகரித்திருக்கிறது. குறுவை மற்றும் சம்பா பருவங்களில் தண்ணீர் இல்லாததால் கடுமையான இழப்பை சந்தித்த உழவர்கள், கோடைக்கால சாகுபடியிலும் தண்ணீர் இல்லாமல் இழப்பை சந்தித்தால் மீள முடியாத கடன் சுமையில் சிக்கிக் கொள்வர். எனவே, உழவர்களை பாதுகாக்கும் வகையில், காவிரி பாசன மாவட்டங்களில் தினமும் 12 மணி நேரத்திற்காவது மும்முனை மின்சாரம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தெந்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்படும் என்பது குறித்த அட்டவணையையும் வெளியிட வேண்டும்.

# பள்ளிக்கல்வியை நிறைவுசெய்து, கல்லூரி வாழ்வுக்குச் செல்லும் மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

பள்ளிக்கல்வியை நிறைவுசெய்து, கல்லூரி வாழ்வுக்குச் செல்லும் மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வியில் சிறந்து விளங்கி, தலைசிறந்த பொறுப்புகளில் நீங்கள் மிளிர வேண்டும். இம்முறை குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் மனம் தளர வேண்டாம். அடுத்து காத்திருக்கும் வாய்ப்புகள் உங்கள் முன்னேற்றத்துக்கான துணையாக அமையும் என்ற நம்பிக்கையுடன் முன்னே செல்லுங்கள் என்று முதல்வர் கூறியுள்ளார்.







தமிழ்நாட்டில் தமிழக அரசு பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு 12ம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் 22-ந்தேதி வரையில் பொதுத்தேர்வு நடந்தது. பிளஸ்-2 தேர்வை சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் மாணவ-மாணவிகள் எழுதினார்கள். 12ம் வகுப்பு விடைத் தாள்கள் திருத்தும் பணி கடந்த ஏப்ரல் மாதம் 13-ம் தேதி நிறைவடைந்தது. 12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் 06.05.2024 அன்று வெளியானது.

இதில் இந்த தேர்வில் தமிழ்நாட்டில் 7 லட்சத்து 60 ஆயிரத்து 606 மாணவ, மாணவிகள் எழுதினர். இவர்கள் தவிர தனித் தேர்வர்கள் 21,875 பேரும், சிறைவாசிகள் 125 பேரும் தேர்வில் பங்கேற்றனர். இதில் 7,19,196 பேர் தேர்ச்சி அடைந்துள்ளனர். இந்த தேர்வில் 41,410 பேர் தேர்ச்சி அடையவில்லை.

தேர்ச்சி அடைந்த மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். தேர்ச்சி அடையாத மாணவர்களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் அளித்துள்ளார். அவர் தனது எக்ஸ் தளத்தில் இம்முறை குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் மனம் தளர வேண்டாம் என்றும் அடுத்து காத்திருக்கும் வாய்ப்புகள் உங்கள் முன்னேற்றத்துக்கான துணையாக அமையும் என்ற நம்பிக்கையுடன் முன்னே செல்லுங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.



# 10ம் வகுப்பில் கலைஞர் கருணாநிதி பற்றிய பாடம் அறிமுகம்

9ம் வகுப்பு புத்தகத்தை தொடர்ந்து 10-ம் வகுப்பு தமிழ் பாட புத்தகத்திலும் கலைஞர் கருணாநிதி பற்றிய பாடம் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இதற்காக கலைஞர் கருணாநிதியின் சிறப்புகள் என்ற பெயரில் 11 தலைப்புகளில் உள்ளடக்கி பாடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குழந்தை உள்ள கலைஞர், போராட்ட கலைஞர், பேச்சு கலைஞர், நாடக கலைஞர், திரை கலைஞர், இதழியல் கலைஞர், இயற்றமிழ் கலைஞர் என்ற தலைப்புகளில் பாடம் கவிதை கலைஞர், கட்டுமான ஆர்வலர் கலைஞர், செம்மொழி கலைஞர் என 11 தலைப்புகளில் கருணாநிதி சிறந்து விளங்கிய துறைகள், அவர் செய்த சாதனைகள் 10-ம் வகுப்பு தமிழ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

2021-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் ஸ்டாலின் தலைமையிலான திமுக கூட்டணி வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சியை பிடித்தது. 10 வருடங்கள் கழித்து ஆட்சிக்கு வந்த ஸ்டாலின் தலைமையிலான திமுக




அரசு, பாடப்புத்தகத்தில் மறைந்த முன்னாள் முதல்வரும், திமுகவின் முதுப்பெரும் தலைவருமான கலைஞர் கருணாநிதியின் வாழ்க்கை வரலாறு பாடப் புத்தகத்தில் சேர்க்கப்படும் என அறிவித்தது.

கடந்த 2023-24-ம் கல்வியாண்டின் போது தமிழக அரசின் பாடத்திட்டத்தின்படி உள்ள 9-ஆம் வகுப்பு பாடப் புத்தகத்தில் தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைப்பதற்கு முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பாடமாகச் சேர்க்கப்பட்டன.

இந்நிலையில் பத்தாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் நடப்பாண்டில் உரைநடை பகுதியில் "பன்முகக் கலைஞர்" என்ற தலைப்பில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பல்வேறு திறன்கள் குறித்தும், தமிழ் மற்றும் கலைத்துறையில் செய்த பணிகள் குறித்தும் 5 பக்கங்கள் கொண்ட பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த பாடப் பகுதியின் இறுதியில் தமிழ் வெல்லும் என்று கலைஞர் கருணாநிதியின் கையெழுத்தையும் பதித்துள்ளனர். பல்வேறு திறன்கள் மூலம் அரசியல் மற்றும் எழுத்து உலகிலும் சிறந்து விளங்கினார் என்பதற்காக கருணாநிதியின் திறமைகளை விளக்கும் வகையில் பத்தாம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் ஒரு பாடமாகச் சேர்த்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# கொடைக்கானல் டூ சென்னை: திரும்பிய முதல்வர் ஸ்டாலின்

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு முடிந்த நிலையில், கடந்த ஏப். 29-ம் தேதி ஓய்வெடுப்பதற்காக குடும்பத்தினருடன் கொடைக்கானல் சென்றார் முதல்வர் ஸ்டாலின். அங்கு தனியார் ஹோட்டலில் 5 நாட்கள் தங்கி ஓய்வெடுத்தார்.

முதலமைச்சரின் வருகையை முன்னிட்டு கொடைக்கானலில் தீவிர போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. ட்ரோன்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டது.

ஏப்ரல் 30ஆம் தேதி மாலை பசுமை பள்ளத்தாக்கு அருகே கோல்ப் மைதானத்தில் சிறிது நேரம் கோல்ஃப் விளையாடினார். அவரைப் பார்க்க கூடிய மக்களோடு செல்பியும் எடுத்துக் கொண்டார்.

முதலமைச்சருடன் அவரது மனைவி துர்கா ஸ்டாலின் எந்த ஊருக்கு சென்றாலும் அங்குள்ள கோவிலுக்கு சென்று வழிபாடு நடத்தி வருவார். அந்த வகையில் கொடைக்கானல் பூம்பாறை குழந்தை வேலப்பர் கோவில், குறிஞ்சியாண்டவர் கோவிலுக்கு அவர் சென்று சாமி தரிசனம் செய்தார்.

கோடை விடுமுறை என்பதால் கொடைக்கானலுக்கு சுற்றுலா செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வார இறுதி நாள்களில் அதிகளவில் மக்கள் வருவார்கள். எனவே மக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக திங்கள் கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை அவர் கொடைக்கானலில் தங்கியிருந்தார்.

இந்த ஓய்வு நேரத்தில் மக்களவைத் தேர்தல் முடிவுகள், அதன் பின்னர் செய்ய வேண்டிய பணிகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் அமைச்சர் ஐ.பெரியசாமியை மட்டும் வரவழைத்து, முதல்வர் ஸ்டாலின் சிறிது நேரம் பேசியுள்ளார்.



இந்நிலையில் 03.05.02024 அன்று கொடைக்கானலில் இருந்து முதல்வர் ஸ்டாலின் காரில் மதுரைக்குப் புறப்பட்டார்.

தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வெளியே நின்றிருந்த கட்சி நிர்வாகிகள் சிலரிடம் பொன்னாடைகளைப் பெற்றுக்கொண்டார். வழியில், பெருமாள் மலை கிராமத்தில் சாலையோரம் நின்றிருந்த மக்களிடம் மனுக்களைப் பெற்றார்.

கொடைக்கானல் மலையடிவாரம் காட்ரோடு அருகேயுள்ள கவிஞர் வைரமுத்து பண்ணை வீட்டுக்கு முதல்வர் ஸ்டாலின் சென்று அங்கு தேநீர் அருந்தினார். சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு அங்கிருந்து மதுரை விமான நிலையம் புறப்பட்டார்.

வழிநெடுகிலும் காவல்துறையினர் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டனர். மதுரை விமான நிலையத்தில் இருந்து தனி விமானத்தில் குடும்பத்தினருடன் முதல்வர் ஸ்டாலின் புறப்பட்டு சென்னை விமான நிலையம் வந்தடைந்தார்.

# ஆதார் அட்டையை இலவசமாக அப்டேட் செய்ய கடைசி சான்ஸ்.. இதற்கு மேல் போனால் அபராதம்..

ஆதார் அட்டையை இலவசமாக புதுப்பிக்க கடைசி வாய்ப்பு இதுவாகும். இல்லையெனில் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள அனைத்து இந்தியர்களும் ஆதார் அட்டை வைத்திருப்பது அல்லது பெறுவது மிகவும் முக்கியம். ஆதார் அட்டை என்பது நீங்கள் எப்போதும் உங்களுடன் வைத்திருக்க வேண்டிய ஒரு ஆவணமாகும். ஆதார் அட்டை இல்லாமல் எந்த ஒரு அரசின் திட்டத்தின் பலன்களையும் பெற முடியாது. ஆதார் அட்டை உங்கள் அடையாளத்தையும் சொல்கிறது. அத்தகைய சூழ்நிலையில், உங்கள் ஆதார் அட்டையில் பெயர், முகவரி, பயோமெட்ரிக் தரவு மற்றும் பிற தகவல்களை புதுப்பித்து வைத்திருப்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில் ஆதார் அட்டையில் உள்ள ஒரு தவறு, அரசின் சில திட்டங்களைப் பறித்துவிடும்.

இதுபோன்ற சூழ்நிலையில், உங்கள் ஆதார் அட்டையை இலவசமாக புதுப்பிக்க விரும்பினால், ஜூன் 14 வரை அதற்கான அவகாசத்தை அரசு வழங்கியுள்ளது. ஜூன் 14 வரை UIDAI இணையதளத்திற்குச் சென்று உங்கள் ஆதார் அட்டையில் உள்ள ஆதார் தகவல்களை இலவசமாகப் புதுப்பிக்கலாம். இந்தத் தேதிக்குப் பிறகு ஆதார் விவரங்களைப் புதுப்பிப்பதற்கு கட்டணம் செலுத்த வேண்டும். ஆதார் அட்டையை இலவசமாக அப்டேட் செய்யும் முறை இதுதான். முதலில் நீங்கள் அனைவரும் ஆதார் அட்டையின் அதிகாரப்பூர்வ இணையதளமான uidai.gov.in க்கு செல்ல வேண்டும்.

இங்கே MY ஆதார் என்பதைக் கிளிக் செய்த பிறகு, கீழ்தோன்றும் மெனுவிலிருந்து உங்கள் ஆதாரைப் புதுப்பிக்கவும் என்பதைக் கிளிக் செய்ய வேண்டும். ஆதார் எண் மற்றும் கேப்ட்சா சரிபார்ப்புக் குறியீட்டை உள்ளிட்ட பிறகு, Send OTP என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.



இப்போது நீங்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணில் பெறப்பட்ட OTP உதவியுடன் உள்நுழைய முடியும். இப்போது நீங்கள் அடுத்த பக்கத்தில் மக்கள்தொகை விவரங்களை மாற்ற வேண்டும், இதற்குப் பிறகு சமர்ப்பி புதுப்பிப்பு கோரிக்கையைக் கிளிக் செய்வதற்கு முன் தொடர்புடைய ஆவணத்தின் நகலை பதிவேற்ற வேண்டும்.

இதற்குப் பிறகு நீங்கள் இறுதியாக SMS மூலம் புதுப்பிப்பு கோரிக்கை எண்ணைப் (URN) பெறுவீர்கள். கோரிக்கையின் நிலையை நீங்கள் கண்காணிக்க முடியும். உங்கள் ஆதார் அட்டையில் உள்ள உங்கள் பெயர், முகவரி மற்றும் பிற அனைத்து தகவல்களையும் வீட்டிலோ அல்லது நீங்களே உட்கார்ந்து கொண்டு இலவசமாக புதுப்பிக்கலாம். ஜூன் 14ஆம் தேதிக்குப் பிறகு ஆதார் அட்டையைப் புதுப்பித்தால் அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். தற்போது, ஆதார் அட்டையை புதுப்பிப்பதற்கான கட்டணத்தை யுஐடிஏஐ நிர்ணயம் செய்யவில்லை.

# ஆன்லைன் சூதாட்டம்! தமிழக அரசு எச்சரிக்கை!



ஆன்லைன் சூதாட்டம் பற்றி விளம்பரப்படுத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் இணையவழி சூதாட்டம், இணையவழி வாய்ப்பு விளையாட்டு, பந்தயம் போன்றவற்றை விளம்பரப்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தடையை மீறி ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடுவோருக்கு ஓராண்டு வரை சிறை தண்டனை அல்லது ரூ.5 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாடு இணையவழி சூதாட்டத் தடை மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் 2022-இன்படி, இணையவழி சூதாட்டம் மற்றும் இணையவழி வாய்ப்பு விளையாட்டு, பந்தயம் போன்றவற்றை விளையாடுவதைத் தடை செய்துள்ளது. அவ்வாறு தடை செய்யப்பட்ட இணையவழி சூதாட்டங்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றம் புரிபவர்களுக்கு 3 மாதம் வரை சிறைத் தண்டனையோ அல்லது ரூ.5,000 வரை அபராதமோ அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

இணையவழி சூதாட்டம் (Online Gambling) அல்லது இணையவழி வாய்ப்பு விளையாட்டுகள் (Game of Chance) பரிவத்தனைகளில் ஈடுபடும் நிதி நிறுவனங்களை / கட்டண நுழைவாயில்களை இச்சட்டம் தடை செய்கிறது.

இணையவழி சூதாட்டங்கள் அல்லது வாய்ப்பு அடிப்படையிலான இணையவழி விளையாட்டுகள் குறித்த விளம்பரங்கள் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணம் அல்லது பிற வழிகளில் இணையவழி சூதாட்டத்தில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் அல்லது தூண்டும் வகையில் எந்த ஒரு நபரும் மின்னணு தொடர்பு

சாதனங்கள் உட்பட எந்தவொரு ஊடகத்திலும் விளம்பரமோ அறிவிப்போ செய்ய கூடாது என்று இச்சட்டம் குறிப்பாகக் கூறுகிறது.

அத்தகைய விளம்பரத்தில் ஈடுபடும் நபர்களுக்கு/ நிறுவனத்திற்கு, 1 ஆண்டு வரை சிறைத் தண்டனையோ அல்லது 5 லட்சம் வரை அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப்படும் என்றும் இச்சட்டம் குறிப்பிடுகிறது. அதே குற்றத்தை மீண்டும் செய்தால், சட்டம் 1 முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூ.5 முதல் 10 லட்சம் வரை அபராதம் விதிக்கிறது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 மற்றும் பிற சட்டங்களின்படி, தடைசெய்யப்பட்ட செயல்பாடுகள் / சேவைகள் மீதான விளம்பரங்களுக்குத் தடை இருப்பதாக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (சிசிபிஏ) அறிவுறுத்தியுள்ளது. அத்தகைய தடை செய்யப்பட்ட விளம்பரங்களை ஒளிபரப்பும் நபர்கள்/ பிரபலங்கள், விளம்பர நிறுவனங்கள் / விளம்பர தயாரிப்பாளர்கள் / சமூக ஊடகத் தளங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுகர்வோர் ஆணையம் அறிவித்துள்ளது.





எனவே, இம்மாநிலத்தில் இணையவழி சூதாட்டம் மற்றும் இணையவழி வாய்ப்பு விளையாட்டு, பந்தயம் போன்றவற்றை விளம்பர பதாகைகள், சுவரொட்டிகள், பேனர்கள், ஆட்டோ ரிக்ஷா விளம்பரங்கள் போன்ற வெளிப்புற ஊடகங்கள் மூலமாகவும், அவர்களின் இணையதளம்/ இணையதள செயலி பயன்பாடுகளை விளம்பரப்படுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது.

இணையவழி சூதாட்டம் / பந்தய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைப் பகிர விரும்புவோர் அல்லது இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குபடுத்துவது குறித்த ஆலோசனைகளை வழங்க விரும்புவோர் அல்லது இது சம்பந்தமாக வேறு ஏதேனும் குறைகள் இருப்பின் "www.tnonlinegamingauthority.com என்ற இணையதளத்தைத் தொடர்பு கொள்ளவும். மேலும் தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையத்தின் tnoga@tn.gov.in என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# ஐஐடி மெட்ராஸ், பணிபுரியும் தொழில் வல்லுநர்களுக்காக மின்வாகனப் போக்குவரத்து (E-mobility) தொடர்பான இணையவழி எம்டெக் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்), பணிபுரியும் தொழில் வல்லுநர் களுக்காக மின்வாகனப் போக்குவரத்து எனப்படும் இ-மொபிலிட்டியில் (WEMEM) தொழில் சார்ந்த இணையவழி எம்டெக் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. தொழில் வல்லுநர்களுக்கான உள்ளடக்கங்கள் இடம்பெற்றிருப்பது பாடநெறியின் தனித்துவம் வாய்ந்த அம்சமாகும்.

கல்வி மற்றும் தொழில்துறை நிபுணர்களின் உள்ளீடுகளுடன் உருவாக்கப்பட்ட இந்த எம்டெக் பாடத்திட்டம், தொழில்துறையின் தேவை அடிப்படையில் தொடர்ந்து மேம்படுத்தப்படும்.


செப்டம்பர் 2024-ல் தொடங்கவுள்ள தொகுதிக்கு பதிவுசெய்ய 26 மே 2024 கடைசி நாளாகும். பாடத்திட்டம் குறித்த விவரங்களை கீழ்க்காணும் இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்: https://code.iitm.ac.in/emobility

இப்பாடத்திட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்த ஐஐடி மெட்ராஸ் இயக்குநர் பேராசிரியர் வி.காமகோடி கூறும்போது, “இ-மொபிலிட்டி களத்தில் பணிபுரியும் தொழில் வல்லுநர்களுக்கு சான்றிதழ் படிப்புகள் மூலம் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அளிப்பதில் ஐஐடி மெட்ராஸ் முன்னணியில் இருந்து வருகிறது. இப்பாடத் திட்டத்தின் இயற்கையான பின்தொடர்தலாக எம்டெக் படிப்பை தொடங்க வேண்டும் என பங்கேற்பாளர்களும், மோட்டார் வாகன தொழில்துறையினரும் கோரிக்கை வைத்திருந்தார்கள். தேசத்தின் மனிதவள மேம்பாட்டை இக்களத்தின் மூலம் விரைவுபடுத்துவதற்கான எங்களது பணியை மேலும் ஊக்குவிக்கும் என்பதால் WE-MEM-ஐ அறிமுகப்படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்” எனக் குறிப்பிட்டார்.




ஐஐடி மெட்ராஸ்-ன் அவுட்ரீச் மற்றும் டிஜிட்டல் எஜுகேஷன் சென்டர் (CODE) மூலம் வழங்கப்படும் இந்த பட்டப்படிப்பு, ஐஐடி மெட்ராஸ்-ல் இருந்து எம்டெக் பட்டம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐஐடி மெட்ராஸ்-ன் பொறியியல் வடிவமைப்புத் துறை WEMEM-ஐ ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

ஐஐடி மெட்ராஸ்-ன் கல்விப் பாடப்பிரிவுகளுக்கான டீன் பேராசிரியர் பிரதாப் ஹரிதாஸ் கூறும்போது, “ஐஐடி மெட்ராஸ் மூலம் வழங்கப்படும் எம்டெக் பட்டத்திற்கான




அனைத்து கல்வித் தகுதிகளையும் கொண்டதாக WEMEM கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்கிய மற்றும் விருப்பப்பாட கோட்பாடு படிப்புகள் (core and elective theory courses), ஆய்வகங்கள், ப்ராஜக்ட்கள் ஆகியவை அடங்கும். புதிய கல்விக் கொள்கைக்கு இணங்க, இமொபிலிட்டியில் முதுகலை பட்டயப் படிப்பு வடிவில் பாதியில் வெளியேறுவதற்கான வாய்ப்பையும் இதில் செயல்படுத்தியுள்ளோம்" என்றார்.

இத்திட்டம் குறித்து விரிவாக எடுத்துரைத்த ஐஐடி மெட்ராஸ் அவுட்ரீச் மற்றும் டிஜிட்டல் எஜுகேஷன் மையத்தின் (CODE) தலைவரான பேராசிரியர் தேவேந்திர ஜலிஹால் கூறும்போது, "ஐஐடி மெட்ராஸ்-ன் வளாகப் படிப்பு அல்லாத மற்றும் அவுட்ரீச் பாடத்திட்டங்களுக்கு 'கோட்' ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது. தொழில் வல்லுநர்களுக்கான பல்வேறு நிர்வாகக் கல்வித் திட்டங்களையும், தொழில் துறையினருக்கான இணையவழி எம்டெக் பாடத்திட்டங்களையும் ஏற்கனவே வழங்கி வருகிறோம். இப்பட்டியலில் WEMEM இணைவது மகிழ்ச்சி அளிக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

ஐஐடி மெட்ராஸ் அவுட்ரீச் மற்றும் டிஜிட்டல் எஜுகேஷன் (கோட்) மையத்தின் இணைத் தலைவரான பேராசிரியர் ஆண்ட்ரூ தங்கராஜ் மேலும் கூறும்போது, "கோட்பாடுக்கும் நடைமுறைக்கு இடையே நல்லதொரு சமநிலையை உறுதி செய்யும் விதமாக, சில பாடப்பிரிவுகளை வழங்குவதற்கு தொழில்துறையில் இருந்து நிபுணர்களை அழைத்து வந்திருக்கிறோம். ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் வழக்கமான அசைன்மெண்ட்களும், தேர்வுகளும் இருக்கும். இதன் மூலம் வலுமான கல்வி உறுதிசெய்யப்படும்" எனத் தெரிவித்தார்.

ஒரு காலண்டர் ஆண்டில் 3 கல்விப் பருவங்களுடன் மொத்தம் 7 கல்விப் பருவங்களைக் கொண்டதாக இப்பாடத்திட்டம் அமைந்திருக்கும். வரும் செப்டம்பர் மாதம் முதல் தொகுதிக்கான வகுப்புகள் தொடங்கும். அடிப்படைக் கணிதம் மற்றும் இயற்பியல் கோட்பாடுகள் ஆகிய பாடங்களில் நடைபெறும் தேர்வின் அடிப்படையில் பங்கேற்பாளர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள்.

ஐஐடி மெட்ராஸ்-ன் பயிற்சிப் பேராசிரியரும், WEMEM-ன் ஆலோசகருமான பேராசிரியர் கார்த்திக் ஆத்மநாபன் கூறுகையில், "ஐஐடி மெட்ராஸ் எம்டெக் தரத்தை உறுதி செய்யும் WEMEM பாடத்திட்டம் இருப்பதுடன், தொழில்துறை வல்லுநர்களுக்கு தேவையான நெகிழ்வுத் தன்மையையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. வார நாட்களில் பங்கேற்பாளர்கள் பணியில் இருப்பார்கள் என்பதால், சனிக்கிழமைகளில் ஆசிரியர்களுடன் அவர்கள் நேரடி வகுப்புகளில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இப்பாடத்திட்டம் குறித்து விரிவாகப் பேசிய ஐஐடி மெட்ராஸ்-ன் பொறியியல் வடிவமைப்புத் துறை தலைவரான பேராசிரியர் சி.எஸ். சங்கர்ராம் கூறும்போது, "ஐஐடி மெட்ராஸ்-ல் இ-மொபிலிட்டி முன்முயற்சிகளுக்கான ஒருங்கிணைப்புத் துறையாக இத்துறை விளங்குகிறது. முழுநேர ஆசிரியர்கள், பயிற்சிப் பேராசிரியர்கள், துணை ஆசிரியர்கள், விருந்தினர் ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட முக்கிய குழுவினர் இப்படிப்பிற்கான உள்ளடக்கங்களை வழங்குவார்கள். எம்டெக்கின் ஒரு பகுதியாக கற்றலை செயல்படுத்தும் பல்வேறு ஆய்வகங்களையும் இத்துறை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

# சென்னையில் வாகன நம்பர் பிளேட்களில் ஸ்டிக்கர் ஒட்டியதாக ஒரே நாளில் 471 வழக்குகள் பதிவு



சென்னையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தங்கள் வாகனங்களில் ஊடகம், போலீஸ் என பல்வேறு துறைகளை சார்ந்த ஸ்டிக்கர்களை ஒட்டி தவறாக பயன்படுத்தி வருகிறார்கள். இதனால் அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டு போலீசாரிடம் இருந்து எளிதாக தப்பி விடுகிறார்கள்.

எனவே தனியார் வாகனங்களில் அரசால் அங்கீகரிக்கப்படாத ஸ்டிக்கர்களை ஒட்டக்கூடாது. அவ்வாறு ஸ்டிக்கர் ஒட்டி இருப்பவர்கள் மே 1-ந்தேதிக்குள் அதை அகற்ற வேண்டும். அப்படி அகற்றாமல் விதிமீறலில் ஈடுபடுபவர்கள் மீது 02.05.2024 முதல் வழக்குப்பதிவு செய்யப்பட்டு மோட்டார் வாகன சட்டத்தின் படி அபராதம் விதிக்கப்படும். மேலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்' என்று எச்சரித்தார்.

அதன் அடிப்படையில் சென்னையில் விதிகளை மீறி வாகன நம்பர் பிளேட்டுகளில் ஸ்டிக்கர் ஒட்டியவர்களுக்கு அபராதம் விதிப்பதற்காக போலீசார் அதிரடி சோதனைகளில் ஈடுபட்டனர். இதற்காக சென்னையில் உள்ள முக்கிய சாலைகளில் சுமார் 100 இடங்களில் இந்த அதிரடி வாகன சோதனை நடத்தப்பட்டது.

02.05.2024 முதல் முறையாக விதிமீறலில் ஈடுபட்ட வாகனங்களுக்கு போக்குவரத்து போலீசார் ரூ.500 அபராதம் விதித்தனர். முதல் முறை வழக்குப்பதிவு செய்யப்பட்ட பின்னரும் 2-வது முறையாக விதிமீறலில் ஈடுபட்டால் ரூ.1,500 அபராதம் விதிக்கப்படும் என்றும் போலீசார் அவர்களை எச்சரித்து அனுப்பினார்கள்.

இந்நிலையில், வாகன நம்பர் பிளேட்களில் ஸ்டிக்கர் ஒட்டியதாக ஒரே நாளில் 471 வழக்குகள் பதிவு செய்துள்ளது சென்னை போக்குவரத்து காவல்துறை. இதில் 121 போலீஸ் வாகனங்களும் அடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.


# அறிவியல் ரீதியில் தரவுகள் தயார் செய்கிறோம்: தமிழக வனத்துறையின் செயலாளர் சுப்ரியா சாஹு



வரையாடுகள் பாதுகாப்பு குறித்து சூழலியலாளர்களின் கோரிக்கைகளுக்கு, தமிழக வனத்துறையின் செயலாளர் சுப்ரியா சாஹு விளக்கம் அளித்துள்ளார். "வரையாடு போன்ற ஒரே ஒரு காட்டுயிருக்கு முக்கியத்துவம் கொடுத்து, தனித்திட்டம் அதற்கென ஆய்வு மையம் உருவாக்கியது இந்தியாவில் இதுவே முதல் முறை. வரையாடுகள் பாதுகாப்பு திட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு மேல், நீண்ட கால அடிப்படையில் தான் மேற்கொள்ளப்படும்," என்றார்.

மேலும் பேசிய அவர், "தற்போது, 'ரேடியோ காலர்' பொருத்தி அவை எங்கெல்லாம் பயணிக்கின்றன, மற்ற கூட்டத்துடன் இணைந்து தகவல் பரிமாற்றம் மற்றும் இனப்பெருக்கம் செய்கின்றனவா போன்றவற்றை பதிவு செய்கிறோம். அவை ஆண்டு முழுவதும் கோடை மற்றும் மழைக்காலம் என பருவம் வாரியாக பயணிக்கும் பகுதிகளை 'ஜியோ டேக்' செய்து 'டிஜிட்டல்' வரைபடமாக தயாரிக்கிறோம்," என்றார்.

"வரையாடுகளின் நோய்கள், அவற்றின் வாழ்விடத்தின் நிலை, அங்குள்ள ஆக்கிரமிப்பு அல்லது மனித நடமாட்டம், அங்கு அவற்றின் உணவான தாவரங்களின் அடர்த்தியைப் பதிவு செய்கிறோம்.



"வரையாடுகள் வாழ்வதற்குத் தகுதியாக உள்ள வனப்பகுதிகளைத் தேர்வு செய்து அங்கு வரையாடுகளை விட்டால் அவை வாழுமா, அவற்றின் இனப்பெருக்கம் அதிகரிக்குமா என, அறிவியல் ரீதியில் ஆய்வு செய்கிறோம். இதற்கென தனியாக விஞ்ஞானிகள், மருத்துவர் குழுவை நியமித்துள்ளோம். மேலும், ஒரு வனப்பகுதியில் உள்ள கூட்டத்தை மாறுபட்ட மற்றொரு வனத்திலுள்ள கூட்டத்துடன் இணைக்கும் பணியை செய்கிறோம்," என்கிறார் தமிழக வனத்துறையின் செயலாளர் சுப்ரியா சாஹு.

# நாய்களுக்கு 'லைசென்ஸ்' வாங்க போட்டி போடும் உரிமையாளர்கள்

சென்னையில் செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வாங்க கடந்த 3 நாட்களில் மட்டும் 2,300 பேர் விண்ணப்பித்துள்ளனர். இதில் 930 பேருக்கு இதுவரை லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் சமீபத்தில் 5 வயது சிறுமி ஒருவரை நாய்கள் கடித்துக் குதறிய சம்பவம் பெரும் பரபரப்பைக் கிளப்பியது. தொடர்ந்து, வெவ்வேறு பகுதிகளில் வளர்ப்பு நாய்கள், மனிதர்களை கடித்த சம்பவங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இதையடுத்து மீண்டும் இதுபோன்ற சம்பவம் நடக்காமல் இருக்க மாநகராட்சி பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்தது. குறிப்பாக நாய்களை வளர்ப்போர் கட்டாயம் சென்னை மாநகராட்சியில் பதிவு செய்து உரிமம் பெற்றிருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளுக்கு உரிய உரிமம் பெறப்பட்டுள்ளதா என்று மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் மூலம் வீடுகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளர்ப்பு பிராணிகளுக்கு உரிமம் பெறாவிட்டால் ரூ. 1000 அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, செல்லப் பிராணிகளுக்கு உரிமம் பெறுவதற்காக, உரிமையாளர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர். சிறுமியை நாய் கடித்த சம்பவத்திற்கு முன், அதாவது 5ஆம் தேதிக்கு முன்பு வரை 397 பேர் மட்டுமே, தங்கள் செல்லப் பிராணிகளுக்கு உரிமம் கோரி விண்ணப்பித்து இருந்தனர்.



சென்னை மாநகராட்சியின் கடும் எச்சரிக்கையை தொடர்ந்து, கடந்த 3 நாட்களில் மட்டும் 2,300 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில், 930 பேருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதாகவும் சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

நாய்களுக்கான லைசென்ஸ் கோரி வரும் விண்ணப்பங்களை தீவிரமாக ஆய்வு செய்து முறையான ஆவணங்கள் பெற்ற வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் வழங்கி வருவதாகவும், பதிவேற்றம் செய்யும் போது நாயின் புகைப்படம், வயது, இனம், ரேபிஸ் நோய் தடுப்பூசி போட்டதற்கான சான்றிதழ் ஆகியவற்றை குறிப்பிட்டு பதிவேற்றம் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வளர்ப்பு பிராணிகளுக்கு உரிமம் பெற விண்ணப்பிக்கும்போது 50 ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும். ஒரு முறை உரிமம் பெற்றதோடு நின்றுவிடாமல், ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் இதை ரூ.50 செலுத்திப் புதுப்பிக்க வேண்டும். அதையும் ஆன்லைனிலையே மேற்கொள்ளலாம்.

# சென்னை சிப்பெட் வழங்கும் பிளாஸ்டிக் பொறியியலில் சிறப்பான வேலைவாய்ப்புக்கான 3 ஆண்டு டிப்ளமோ படிப்புகள்




சென்னையில் உள்ள மத்திய அரசு நிறுவனமான சிப்பெட், பிளாஸ்டிக் பொறியியலில் சிறப்பான வேலைவாய்ப்புக்கான 3 ஆண்டு டிப்ளமோ படிப்புகளை நடத்துகிறது. இந்த படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தொடங்கவுள்ளது.

மத்திய பெட்ரோகெமிக்கல்ஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (சிப்பெட்), 1968-ம் ஆண்டில் இந்திய அரசால் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) உதவியுடன் சென்னையில்நிறுவப்பட்டது.இந்தச்சிறப்புநிறுவனம் நிறுவப்பட்டதன் முக்கிய நோக்கம் பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு பிரிவுகளில் மனித ஆற்றலை மேம்படுத்துவதாகும். இன்று சிப்பெட் நிறுவனம், இந்திய அரசின் ரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் கீழ், உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்விக்கான முதன்மையான கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது. வடிவமைப்பு, CAD / CAM / CAE, கருவி & அச்சு உற்பத்தி, உற்பத்தி பொறியியல், சோதனை மற்றும் தர உத்தரவாதம், பாலிமர் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் சிப்பெட் செயல்பட்டு வருகிறது.

பாலிமர், பிளாஸ்டிக் துறையில் 55 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நிபுணத்துவம் கொண்ட சிப்பெட் நாடு முழுவதும் 45 இடங்களில் செயல்பட்டு வருகிறது. ஏஐசிடிஇ, என்பிஏ அமைப்புகளின் அங்கீகாரம் பெற்ற பாடத் திட்டங்களையும், ஆய்வகங்களையும் நடத்தி வருகிறது. ஐஎஸ்ஓ 9001: 2015 சான்றிதழைப் பெற்ற இந்த நிறுவனம் சிறப்பான வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கான பாடத் திட்டங்களை மாணவ, மாணவியருக்கு அளித்து வருகிறது. சிறந்த சூழலில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி விடுதி வசதி உள்ளது. இந்த நிறுவனத்தின் முன்னாள் மாணவர்கள் உலக அளவில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றனர்.

ஏஐசிடிஇ அங்கீகாரம் பெற்ற 2024-25-ம் ஆண்டுக்கான டிப்ளமோ வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கைத் தொடங்கியுள்ளது. பிளாஸ்டிக் மோல்டு தொழில்நுட்பம், பிளாஸ்டிக் தொழில் நுட்பம் ஆகியவற்றில் 3 ஆண்டு டிப்ளமோ படிப்புகள் வழங்கப்படுகின்றன. இதில் சேர்வதற்கு 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு இல்லை.

சிப்பெட் டிப்ளமோ பெற்றவர்கள் பிளாஸ்டிக் தொழில்நுட்ப பிடெக் வகுப்புகளுக்கு நேரடியாக சேரலாம்.

ஆன்லைனில் விண்ணப்பங்களை அனுப்ப https://cipet24.onlineregistrationform.org/CIPEஜி என்ற இணையதள முகவரியை அணுகவும்.

மேலும் விவரங்களுக்கு 9600254350 / 9941844937 / 9345022712 என்ற தொலைபேசி எண்களையோ அல்லது Email : olc-chennai@cipet.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியையோ, Website: www.cipet.gov.in என்ற இணைய தளத்தையோ அணுகலாம்.

# வெறும் விளம்பரம் தான்..ஒரு 'செங்கல்' கூட எடுத்து வைக்கவில்லை!

## திமுக ஆயுதத்தை கையில் எடுத்த அண்ணாமலை!

ஆட்சிக்கு வந்ததும் 1,000 தடுப்பணைகள் கட்டுவோம் என்று ஜம்பமாக அறிவித்து விட்டு, இதுவரை ஒரு செங்கல் கூட எடுத்து வைக்கவில்லை. இதனால், ஒவ்வொரு ஆண்டும் பெருமளவு மழைநீர் வீணாகக் கடலில் கலக்கிறது. குறிப்பாக, கடந்த 2022 ஆம் ஆண்டு, காவிரியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக, சுமார் 600 டிஎம்சி தண்ணீர் கடலில் கலந்து வீணானது. ஆனால், திமுக அரசு அதற்குப் பின்னரும் சுதாரித்துக் கொள்ளவில்லை.

வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும், காவிரி நீரில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய தண்ணீரையும், கர்நாடக மாநில காங்கிரஸ் அரசிடம் வலியுறுத்திப் பெற்றுத் தர முடியாமல் இருக்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின். தமிழகத்தின் உரிமையான 177 டிஎம்சி தண்ணீரில், வெறும் 78.76 டிஎம்சி தண்ணீர் மட்டுமே, 2023 - 24 ஆண்டில், தமிழகம் பெற்றுள்ளது. பாதியளவு கூட காவிரி நீரைப் பெற்றுத் தராமல், காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை, கர்நாடக காங்கிரஸ் அரசிடம் முழுமையாக அடகு வைத்திருக்கிறார் முதல்வர்.

அதுமட்டுமின்றி, பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கும், ஆனைமலை நல்லாறு திட்டம், செண்பகவல்லி அணை சீரமைப்பு முதலானவற்றைச் செயல்படுத்த, இத்தனை ஆண்டுகளாக எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை. இதனால், பாசனத்துக்கு தண்ணீர் இல்லாமல், விவசாயப் பெருமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். மேலும், அணைகள் தூர்வாரப்படாததால், முழுக் கொள்ளளவில் நீரை தேக்க முடியவில்லை. ஏரி, குளங்களை ஆக்கிரமித்து, நீர்நிலைகளைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றனர் திமுகவினர். இவை எதையும் கண்டுகொள்ளாமல், வழக்கம்போல ஒரு குழு அமைத்து, பல கோடி ரூபாய் மக்கள் வரிப்பணத்தை வீணடிக்கும் முனைப்பில் இருக்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின்.

ஒவ்வொரு ஆண்டும் கோடைக் காலத்தில், தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்பது முதலமைச்சருக்கோ, திமுக மூத்த அமைச்சர்களுக்கோ தெரியாதா? நிரந்தரத் தீர்வை நோக்கிய ஒரு தொலை நோக்குத் திட்டத்தையேனும் இதுவரை அறிவித்தோ, செயல்படுத்தியோ இருக்கிறதா திமுக? சென்னையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையே மூன்றாண்டுகளாக இழுத்தடித்துக் கொண்டிருக்கும் திமுக, மழை நீரைச் சேகரிக்க, நீர்நிலைகளைத் தூர்வாருவதிலும், சீரமைப்பதிலும் சிறிது கூடக் கவனம்



செலுத்தாததன் விளைவே, தமிழகம் முழுவதும் நிலவி வரும் தண்ணீர்ப் பற்றாக்குறையின் அடிப்படை.

கோடைகாலத்தில் நீர்நிலைகளைச் சீரமைப்பது, புதிய நீர்நிலைகளை உருவாக்குவது, தேவையான தடுப்பணைகள் கட்டுவது உள்ளிட்டவை, அடுத்து வரும் மழைக்காலத்தில் தண்ணீரைச் சேமித்து வைக்க உதவும் என்பதும், அடுத்த கோடைக்காலத்தில், தண்ணீர்ப் பற்றாக்குறையில் இருந்து மக்களைக் காப்பாற்ற உதவும் என்பதும் அடிப்படை அறிவுடைய ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை. ஆனால், திமுகவின் நடவடிக்கைகள், அதற்குச் சற்றும் பொருத்தமில்லாமல் இருக்கின்றன. எந்தவித தொலைநோக்குத் திட்டங்களும் இல்லாமல், மழைக்காலத்தில் வெள்ளத்தில் மக்களைத் தத்தளிக்க விடுவதும், கோடைக் காலத்தில் குடிநீர் பற்றாக்குறையில் அல்லல்பட வைப்பதும் தொடர்கதையாகி இருக்கிறதே தவிர, திமுக அரசு, இதற்கான ஒரு நிரந்தரத் தீர்வு குறித்து சிந்திப்பதே இல்லை.

தற்போதைய தண்ணீர் பற்றாக்குறை தீர்க்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அதே நேரத்தில், இதற்கான நிரந்தரத் தீர்வுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நீர்நிலைகளை மீட்கும் நடவடிக்கைகளையும், நீர் நிலைகளைச் சீரமைக்கும் பணிகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும், திமுக அரசை வலியுறுத்துகிறேன். மேலும், மழைக்காலம் தொடங்கிய பிறகு திமுக நடத்தும் வழக்கமான நாடகங்களை எதிர்கொள்ளும் பொறுமையைப் பொதுமக்கள் இழந்து விட்டதால் வடிகால் பணிகளையும் மழைக்காலம் வரை இழுத்தடிக்காமல், முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" என கூறியுள்ளார்.

# கட்சி மாறும் இளம் நிர்வாகிகள்!

தமிழ்நாட்டில் ஒரு கட்சியின் உட்கட்சி மோதல் டெல்லி வரை சென்றுள்ளதாம். டெல்லி வரை கட்சி மோதல் குறித்த பஞ்சாயத்து சென்றுள்ளதாம்.

இரண்டு வாரங்களுக்கு முன் நாடு முழுக்க லோக்சபா தேர்தல் திருவிழா பிரம்மாண்டமாக தொடங்கியது. கடந்த 2019ம் ஆண்டை போலவே இந்த முறையும் நாடு முழுவதும் 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது.

இரண்டு வாரம் முன்பு 2024 மக்களவை தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு நடந்தது. தமிழ்நாட்டின் 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடந்தது. தமிழ்நாட்டில் மொத்தம் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். நாடு முழுவதும் 21 மாநிலங்களில் உள்ள 102 லோக்சபா தொகுதிகளுக்கு முதற்கட்டமாக தேர்தல் நடந்தது.

தமிழகத்தில் பதிவான மொத்த வாக்கு சதவீதம் முதலில் 72.09 சதவீதம், 2வது 69.46 சதவீதம் என அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது 69.71 சதவீதம் என 3வது முறையாக மாற்றி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லோக்சபா தேர்தல் தமிழ்நாட்டில் முடிந்தாலும்.. தேர்தலுக்கு பிந்தைய பரபரப்பு இன்னும் தமிழ்நாட்டில் அடங்கவில்லை. அதிலும் லோக்சபா தேர்தல் காரணமாக கட்சிகளுக்கு இடையே புதிய பிரச்சனைகள், புதிய மோதல்கள் ஏற்பட்டு உள்ளன.

சில கட்சிகளுக்கு உள்ளே உட்கட்சி மோதலும் உச்சம் தொட்டு உள்ளது. அந்த வகையில்தான் தமிழ்நாட்டில் ஒரு கட்சி உள்ளே கடுமையான உட்கட்சி மோதல் ஏற்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

அதன்படி கட்சியின் தோல்வி கிட்டத்தட்ட உறுதி என்று உட்கட்சி ரிப்போர்ட் தெரிவித்துள்ளதால் அந்த கட்சியில் கடும் பூசல் ஏற்பட்டு உள்ளதாம். அதன்படி கட்சியின் தலைமைக்கு எதிராக மூத்த தலைவர்கள் மொத்தமாக அணிவகுக்க தொடங்கி உள்ளனராம். மூத்த நிர்வாகிகள் பலரும் தலைவரின் தன்னிச்சையான செயல்பாடுதான் காரணம் என்று



புகார் வைக்க தொடங்கி உள்ளனராம். அதோடு கட்சியின் செலவுக்காக மேலிடம் கொடுத்த நிதியை தலைவர் தங்களுக்கு கொடுக்கவே இல்லை என்றும் மூத்த நிர்வாகிகள் புகார் வைக்கின்றனராம். தேர்தலில் பெரிய நிதி முறைகேடு நடந்து உள்ளது என்று நிர்வாகிகள் புகார் வைக்கின்றனராம்.

இந்த நிதி முறைகேடு தொடர்பாக கட்சியின் தலைவர் ஒருவருக்கும் - அவருக்கு லெப்ட் ஹேண்டாக இருந்தவருக்கு இடையே கடுமையான மோதல் ஏற்பட்டு உள்ளதாம். இவர்கள் இருவரும் ஒன்றாக, நட்பாகவே இருந்தனர்.

ஆனால் தேர்தல் நிதி பயன்பாட்டில் இருவருக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டு உள்ளதாம். இதையடுத்து வடக்கில் இருக்கும் நிர்வாகி ஒருவரிடம் விஷயம் கொண்டு செல்லப்பட்டு உள்ளது அந்த நிர்வாகியிடம் இது பற்றிய ஆலோசனைகள் செய்யப்பட்டு உள்ளது. இரண்டு தலைகளிடம் அந்த தலைவர் பேசி பஞ்சாயத்து செய்துள்ளார்,

ஆனால் அந்த பஞ்சாயத்து தோல்வி அடைந்தது. இருவருக்கும் இடையில் எவ்வளவு பேசியும் கூட சமாதானம் செய்து வைக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்தே அந்த நிர்வாகி கட்சி மாறும் முடிவை எடுத்துள்ளாராம்.

அந்த இளம் நிர்வாகி ஏற்கனவே தனக்கு எதிராக இருக்கும் அந்த கட்சியுடன் பேசி வருகிறாராம். தனது கட்சி நிர்வாகிகள் சிலரை அழைத்துக்கொண்டு அந்த இளம் நிர்வாகி மொத்தமாக கட்சி மாறும் முடிவை எடுத்துள்ளாராம்.

# காடுகளின் முக்கியத்துவத்தை மறந்து மனித சமுதாயம் தவறு செய்கிறது:

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு




டேராடூனில் உள்ள இந்திரா காந்தி தேசிய வன அகாடமியில் ஏப்ரல் 24, 2024 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இந்திய வனப் பணியின் (2022 பிரிவு) பயிற்சி அதிகாரிகள் இடையே குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றினார். காடுகளின் முக்கியத்துவத்தை மறந்து மனித சமுதாயம் தவறு செய்து வருகிறது என்று கூறிய அவர், காடுகள் உயிர் அளிப்பவை என்று தெரி-வித்தார். உண்மையில், காடுகள் பூமியில் உள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதாக குறிப்பிட்டார்.

மனிதனை மையமாகக் கொண்ட வளர்ச்சியின் காலமான மானுடவியல் பற்றி இன்று நாம் பேசுகிறோம் என்று குடியரசுத் தலைவர் கூறினார். இந்த காலகட்டத்தில், வளர்ச்சியுடன் பேரழிவு விளைவுகளும் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். வளங்களின் நீடித்த தன்மையற்ற சுரண்டல் மனிதகுலத்தை வளர்ச்சியின் தரங்களை மறுமதிப்பீடு செய்ய வேண்டிய கட்டத்திற்கு கொண்டு வந்துள்ளதாக அவர் கூறினார். பூமியின் வளங்களின் உரிமையாளர்கள் நாம் அல்ல என்றும், எனினும் நாம் அதன் அறங்காவலர்கள் என்பதைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். நமது முன்னுரிமைகள் மானுடத்தை மையமாகக் கொண்டதாகவும், சுற்றுச்சூழலை மையமாகக் கொண்டதாகவும்








இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். உண்மையில், சுற்றுச்சூழலை மையமாகக் கொண்டால்தான் நாம் உண்மையிலேயே மானுடத்தின் மையமாக இருக்க முடியும் என்று அவர் கூறினார்.

உலகின் பல பகுதிகளில் வன வளங்கள் மிக விரைவாக அழிந்துள்ளதாக தெரிவித்த அவர், காடுகளை அழிப்பது என்பது ஒரு வகையில் மனித இனத்தை அழிப்பதாகும் என்று குறிப்பிட்டார். பூமியின் பல்லுயிர் பெருக்கம் மற்றும் இயற்கை அழகை பாதுகாப்பது மிக முக்கியமான பணியாகும் என்றும் அதை நாம் மிக விரைவாக செய்ய வேண்டும் என்பது அனைவரும் அறிந்த உண்மை என்றும் அவர் தெரிவித்தார்.

காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதன் மூலம் மனித உயிர்களை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற முடியும் என்று குடியரசுத் தலைவர் கூறினார். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் உதவியுடன் சேதத்தை விரைவாக சரிசெய்ய முடியும். என்று அவர் தெரிவித்தார். உதாரணமாக, மியாவாக்கி முறை பல இடங்களில் பின்பற்றப்படுகிறது என்றும் காடு வளர்ப்புக்கு ஏற்ற பகுதிகள் மற்றும் குறிப்பிட்ட பகுதி சார்ந்த மர இனங்களை அடையாளம் காண செயற்கை நுண்ணறிவு உதவும் என்றும் அவர் கூறினார். இதுபோன்ற பல்வேறு அம்சங்களை மதிப்பீடு செய்து நாட்டின் புவியியல் நிலைமைகளுக்கு ஏற்ற தீர்வுகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது என்று அவர் கூறினார்.

சுற்றுச்சூழலுக்காக ஈடு இணையற்ற பணிகளை செய்த பல அதிகாரிகளை இந்திய வனப் பணி நாட்டிற்கு வழங்கியுள்ளது என்று குடியரசுத் தலைவர் கூறினார். **திரு ஸ்ரீனிவாஸ், திரு சஞ்சய் குமார் சிங், திரு.எஸ் மணிகண்டன்** போன்ற ஐஎஃப்எஸ் அதிகாரிகள் கடமையின் போது தங்கள் உயிரைத் தியாகம் செய்துள்ளனர் என்றும் பயிற்சி அதிகாரிகள் இதுபோன்ற அதிகாரிகளை முன்மாதிரியாகவும், வழிகாட்டிகளாகவும் தங்களை உருவாக்கிக் கொண்டு அவர்கள் காட்டும் லட்சியங்களை பின்பற்றி முன்னேற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐ.எஃப்.எஸ் அதிகாரிகள் பழங்குடியின மக்களுடன் களத்தில் நேரத்தை செலவிட வேண்டும் என்றும் அவர்களின் அன்பையும் நம்பிக்கையையும் பெற வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். பழங்குடி சமூகத்தின் நல்ல நடைமுறைகளிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். அவர்கள் தங்கள் பொறுப்புகளை பொறுப்பேற்று ஒரு முன்மாதிரியாக மாற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# வெப்ப அலை, பெருவெள்ளம், உருகும் பனிப்பாறைகள்:
## இயற்கை பேரிடரால் 2023-ல் மோசமாக பாதிக்கப்பட்ட நாடு இந்தியா



இயற்கை பேரிடர்களால் 2023-ம் ஆண்டில் கடுமையாக பாதிக்கப்பட்ட நாடு இந்தியா என்றும். மேலும் பல இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளும் அபாயத்தில் இந்தியா இருப்பதாகவும் உலக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இது தொடர்பாக உலக வானிலை ஆய்வு மையம் கூறியதாவது:

2023-ம் ஆண்டில் வட இந்திய கடலோர பகுதிகளில் தீவிர காற்றழுத்தத் தாழ்வு நிலை உண்டானதால் கடந்த மே 14-ம் தேதி மோச்சா சூறாவளி மியான்மரின் ரக்கைன்கடலோரப் பகுதியை தாக்கியது. இதனால் அங்குள்ள குடியிருப்புகள், சாலைகள் சேதமடைந்தன. 156 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதேபோன்று கடந்த ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 600-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இவ்வாறு உலக வானிலை மையம் கூறியது.

**எரிபொருள் அதீத பயன்பாடு:** இதையடுத்து லண்டன் இம்பீரியல் கல்லூரியின் காலநிலை அறிவியல் துறை மூத்த விரிவுரையாளர் ஃபெரட்ரிக் ஓட்டோ கூறும்போது, "இந்தியாவில் பழுப்பு நிலக்கரி, பெட்ரோல், டீசல் உள்ளிட்ட புதைபடிவ எரிபொருட்களை அதீதமாக பயன்படுத்துவதால் அந்நாட்டில் கடும் வெப்ப அலை வீசத்தொடங்கியுள்ளது.

பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தை நிறுத்தும் வரை இந்தியாவின் வெப்பநிலை மென்மேலும் அதிகரித்து அபாய கட்டத்தை எட்டுவதை தடுக்க முடியாது" என்றார்.

**சூழலியல் ஆய்வாளர் ஹர்ஜீத் சிங் கூறியதாவது:** இந்திய நிலப்பகுதியின் மேல்பரப்பில் வெப்பநிலை அதிகரித்து வருவதால் இமாலய பனிப்பாறைகள் வரலாறு காணாத அளவு உருகி கடல்மட்டம் அதிகரிக்க செய்கின்றன. காலநிலை அவசரநிலையால் இந்தியாவில் லட்சக்கணக்கானோர் பேரழிவை சந்திக்கும் அபாயம் உள்ளது.

**பணக்கார நாடுகள் ஆதரவு:** இந்த சூழலை எதிர்கொள்ள பேரிடர் மேலாண்மை திட்டங்கள் அவசரகதியில் மேம்படுத்தப்பட வேண்டும். இந்தியா மென்மேலும் எதிர்கொள்ளவிருக்கும் காலநிலை சவால்களிலிருந்து மீள பணக்கார நாடுகள் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு அளித்திட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# வனத்துறை அமைத்த தண்ணீர் தொட்டியில் தண்ணீர் அருந்தி செல்லும் வன உயிரினங்கள்

ஜவளகிரி வனப்பகுதியில் வனத்துறையினர் அமைத்துள்ள தண்ணீர் தொட்டியில் யானைகள் உள்ளிட்ட வன உயிரினங்கள் தண்ணீர் அருந்திச் செல்கின்றன.


கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக் கோட்டத்திற்கு உட்பட்ட ஜவளகிரி, தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உரிகம், ஓசூர் ஆகிய வனப்பகுதிகளில் தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. இதன் காரணமாக வனஉயிரினங்கள் தண்ணீர் அருந்த வனத்துறையினர் செயற்கையாக தண்ணீர் தொட்டி அமைத்து, அதில் தண்ணீர் நிரப்பி வைத்துள்ளனர்.

சுட்டெரிக்கும் வெயிலின் காரணமாக வன உயிரினங்கள் இத்தொட்டியில் தாகம் தீர தண்ணீர் பருகிச் செல்கின்றன. அதேபோல் ஜவளகிரி வனப்



பகுதியில் அமைத்துள்ள தண்ணீர் தொட்டியில் அப்பகுதியில் உள்ள யானைகள், காட்டெருமை மற்றும் மான் போன்ற வன உயிரினங்கள் தண்ணீர் பருகியும், தண்ணீரில் இறங்கி குளித்து மகிழ்ந்தும் வெயிலின் வெப்பத்தை தணித்துக் கொள்கின்றன.

# மாஞ்சோலை எஸ்டேட் மூட நடவடிக்கை!



திருநெல்வேலி மாவட்டத்தில் மிகவும் பிரபலம் வாய்ந்த இடமாக அம்பாசமுத்திரம் அருகே உள்ள மாஞ்சோலை எஸ்டேட் உள்ளது. இந்த எஸ்டேட் மூடப்பட உள்ளது. இதனால் எஸ்டேட்டில் பணியாற்றும் மக்களை வெளியேற்ற எஸ்டேட் நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேற நோட்டீஸ் ஒட்டும் பணி தொடங்க உள்ளது.



வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.19,999/-
Rs.12,999/-
Rs.2250/-
Rs.999/-
Rs.5690
Rs.3699/-
Rs.7040
Rs.3999/-
Rs.12715
Rs.6999/-
Rs.10990
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.



29.4.2024 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், 'பாவேந்தர் பாரதிதாசன்' அவர்களின் 134-வது பிறந்த நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் மகள் வழிப் பேரன் திரு.க.இளமுருகு ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.





23.4.2024 ஆன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, மெரினா எதிர்புறம் சென்னைப் பல்கலைக்கழக இணைப்பு கட்டட வளாகத்தில் அமைந்துள்ள தொல்காப்பியரின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# கோடை கால பயிற்சி முகாமிற்கு கட்டணம் வசூலிப்பது கண்டிக்கத்தக்கது!

## எடப்பாடி பழனிசாமி



தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தும் கோடை கால பயிற்சி முகாமிற்கு கட்டணம் வசூலிப்பது கண்டிக்கத்தக்கது என அதிமுக பொதுச்செயலாளரும் தமிழக எதிர்க் கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தெரி-வித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தமிழக மாணவ, மாணவிகள் எந்த விளையாட்டுப் பிரிவில் சிறந்து விளங்குகிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அவ்விளையாட்டுக்களில், மாணாக்கர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்குகிறது.

விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் மாவட்டந்தோறும் கோடை கால பயிற்சி முகாம் நடைபெறும். இவ்விளையாட்டுப் பயிற்சி முகாமில் 18 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளலாம்.

அதன்படி இந்தாண்டு ஏப்ரல் 29 முதல் மே 13ஆம் தேதி வரை கால்பந்து, வாலிபால், கபாடி, கூடைபந்து உள்ளிட்ட பல விளையாட்டு களுக்கு கோடை கால சிறப்பு பயிற்சி வழங்கப் படும் என்றும், அதற்காக இந்த ஆண்டு கோடை கால பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சிக் கட்டணமாக சென்னையில் 500 ரூபாயும், இதர மாவட்டங்களில் 200 ரூபாயும் கட்டவேண்டும் என்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் செய்தி வெளியிட்டுள்ளனர்.

கோடை கால பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்களில் பெரும்பாலானோர் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் படித்து வருபவர்கள். அவர்களிடம் பயிற்சிக்கு கட்டணம் வசூலிக்க ஆணையம் வெளி-யிட்ட செய்திக் குறிப்புக்கு, விளையாட்டில் ஆர்வம் உள்ள மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் கடும் எதிர்ப்பு தெரி-வித்துள்ளனர். அதிமுக ஆட்சியில், மாணவர் களின் விளையாட்டுப் பயிற்சியை ஊக்கு விக்கும் வகையில், கோடை கால பயிற்சி முகாமிற்கு எந்தவித கட்டணமும் வசூலிக்காமல், 18 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவி களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு விளையாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வந்தது. ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் இப்பயிற்சி முகாமில் பங்கேற்று தமிழகத்தில் விளையாட்டுத் துறையில் தங்களது திறமை களை நிரூபித்து வந்தனர்.

தமிழகத்தில் விளையாட்டை ஊக்கப் படுத்துவோம், தேசிய மற்றும் உலக அளவிலான போட்டிகளில் தமிழக வீரர்கள் பங்கு பெறுவதை

ஊக்குவிப்போம் என்றும், அதற்காக மாவட்டந் தோறும் விளையாட்டு மைதானங்கள் (ஸ்டேடியம்) அமைக்கப்படும் என்றும், தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை பிரதமரை வைத்து ஆரம்பித்து வைத்தோம் என்றும், உலக செஸ் போட்டியை தமிழகத்தில் நடத்திவிட்டோம் என்றும் சுய தம்பட்டம் அடித்துக்கொள்ளும் திமுக அரசு முதல்வரின் வாரிசு அமைச்சரின் கீழ் செயல்படும் விளை யாட்டு மேம்பாட்டுத்துறை, எந்த ஆண்டும் இல்லாத புதுமையாக இந்த ஆண்டு கோடை கால பயிற்சி முகாமில் கலந்துகொள்ளும் மாணவர்களிடமிருந்து பயிற்சிக் கட்டணமாக 500 ரூபாய் மற்றும் 200 ரூபாய் வசூலிக்கப்படும் என்று அறிவித்துள்ளது விளையாட்டு ஆர்வலர் களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதான் திமுக அரசு தமிழக மாணவர் களிடையே விளையாட்டு ஆர்வத்தை ஊக்கப் படுத்தும் முயற்சி. இந்த ஆட்சியாளர்களின், குறிப்பாக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது, “தகுதி இல்லாதவர் கையில் அதிகாரம் கிடைத்தால், அவர் திறமைசாலி களைக்கூட தகுதியற்றவர்களாக்கி விடுவார் “என்ற மேலை நாட்டு அறிஞர் ஒருவர் சொன்னதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. பாரா ஒலிம்பிக் உலகப் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்றேன் என்று கடையில் வாங்கிய கோப்பையுடன் வந்த நபரை உச்சி முகர்ந்து அவரோடு படம் எடுத்தது மட்டுமின்றி, தன் முதல்வர் தந்தையுடன் நிற்க வைத்து புகைப்படம் எடுத்து வெற்று விளம்பரம் தேடிய அதிபுத்திசாலி அமைச்சரிடம் இதைவிடப் பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது.

விளையாட்டில் ஆர்வமுள்ள, துடிப்புமிக்க மாணவர்களை முடக்கிப் போடும் இந்த நாடகமாடி அரசின் செயலை, அதிமுகவின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன். விளையாட்டை ஊக்கப்படுத்துவோம் என்று ஒருபக்கம் கூறிக்கொண்டே, மறுபக்கம் அரசுப் பள்ளி மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், வழக்கம்போல் கோடை சிறப்பு பயிற்சி முகாமுக்கு எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கக்கூடாது என்று இந்த திமுக அரசை வலியுறுத்துகிறேன்” என குறிப்பிட்டுள்ளார்.

# காட்டு பன்றிகள் அட்டகாசம் விவசாயிகள் வேதனை



வேலூர் மாவட்டம் குடியாத்தத்தை அடுத்த மோடிக்குப்பம் பகுதியில் வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள வேர்கடலைகளை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதாக விவசாயிகள் புகார் தெரி-வித்துள்ளனர்.

விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள வேர்கடலை செடிகளை இரவு நேரங்களில் தோட்டத்தில் கூட்டமாக புகும் காட்டுபன்றிகள், வேருடன் தோண்டி எடுத்து சேதப்படுத்துகின்றன. இதனால் நிலங்கள் முழுவதும் பெரிய அளவில் பள்ளங்கள் ஏற்படுகின்றன. பன்றிகளின் அட்டகாசத்தால் பயிரிடப்பட்டுள்ள வேர்கடலை முழுவதுமாக வீணாகிறது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விளை நிலங்களுக்குள் புகும் பன்றி கூட்டங்களை தடுக்க முயன்றால், மனிதர்களை அவை தாக்குகின்றன எனவும் அச்ச உணர்வுடன் இரவு முழுவதும் மேளங்கள் அடித்தும், பட்டாசுகள் வெடித்தும் சப்தம் எழுப்பினாலும், பன்றிகளின் அட்டகாசம் தொடர்வதாகவும் அப்பகுதி மக்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

# நாட்டு மரங்கள் கொண்ட காடுகள் உருவாக்குவோம்!

பூமியானது இயற்கை வளங்களின் பசுமைக்களமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அன்னையின் பரிசுத்தமான அன்பிற்கு ஈடானது நாம் வாழும் பூமி. "நிலமென்னும் நல்லாளை" அதன் முக்கியத்துவத்தை, பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணரவேண்டியது வசிக்கும் மக்களாகிய நமது கடமை.



சூரியனிலிருந்து மூன்றாவதாக உள்ள கோள் பூமி. அண்டத்தில் உயிர்கள் இருப்பதாக அறியப்படும் ஒரே நிலம். உயிரினங்களும், உயிரற்ற காரணிகளும் வளர்ந்து பெருக இடமளித்த இப்பூமி ஒரே உயிர்க்கோளமாக நமக்கு அளிக்கப்பட்ட கொடை. புவியின் தன்மையும், அதன் இயல்பும் கெடாமல் நமக்கு வழங்கப்பட்ட புவியின் தற்போதைய நிலை, நமது நிலையினையே பிரதிபலிக்கிறது. புவியை அழிப்பதன் வாயிலாக நம்மை இழந்து கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.

பூமியைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அதற்கான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 22 ஆம் தேதி உலக பூமி தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.(வாழ்த்துக்கள் பகிர்வதில்,அதிகமாக) சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய முக்கியத்துவத்தை மக்களிடம் கொண்டுசெல்வதும், அது தொடர்பான செயல்பாடுகளை ஏற்படுத்துவதும் இந்நாளின் முக்கிய நோக்கம். 1970 ஆம் ஆண்டிலிருந்து 192 நாடுகளில் உலக பூமி தினம் கடைபிடிக்கப்படுகிறது.

"முன்னோர்களின் பரிவு"

புவி தோன்றியது முதல், உயிரினங்கள் அனைத்தையும் அரவணைத்து வாழ்விக்கும் பண்பை ஏற்று இயங்குகிறது. இயற்கையின் அரவணைப்பில் உண்டு, களித்து, உறங்கிக் கிடந்த மனிதன், பிற்காலங்களில் மேற்கொண்ட அறிவியல் கண்டுபிடிப்பின் விளைவும், அறிவுப்பெருக்கமும் இயற்கையை சிறிது சிறிதாகச் சிதைக்கத் துவங்கியது. இதன் அடிப்படையில் பொதிந்திருக்கும் உண்மை, சுயநலமின்றி வேறில்லை என்பது மனதைப் பதைக்க வைக்கிறது.

நிலத்தை 'ஐந்திணை'களாகத் தொல்காப்பியர் பிரித்துக் கூறியிருக்கிறார், நிலத்தின் அடிப்படையில் நான்காக, முதற் பொருளின் சிறப்பைக் கூறியிருக்கிறார்.

உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு அடிப்படையான மூன்று பொருள்களில் முதற்பொருள் பற்றி தொல்காப்பியர், "முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" என்று தொல்காப்பிய அகத்திணையியலின் நான்காம் நூற்பாவில் கூறியுள்ளார்.

உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையானது நிலமே ஆகும், நிலமானது புவியே. ஒரு நாட்டின் வளத்தைத் தீர்மானிப்பது நிலம், எனவே தான் தொல்காப்பியர் நிலத்தை முதற்பொருளாக்கியிருக்கின்றார், என்பதும் நம் முன்னோரின் பாங்கும் வியக்கத்தக்கது.

நம் முன்னோர் ஐவகை நிலப்பாகுபாட்டில் அமைதியான வாழ்க்கை முறையை இயற்கையோடு இயைந்து மேற்கொண்டனர் என்பதும் அவர்களின் நிலத்தின் மேல் கொண்ட பற்றும், பரிவும் இன்றும் போற்றத்தக்கது.

சங்க கால மக்கள் தங்கள் வாழ்க்கையோடு நிலத்தை இணைத்துக் கொண்டிருந்தனர், அவர்களின் வீரமும், காதலும் அவர்கள் மிக விரும்பும் நிலத்திலேயே நிகழ்த்த இன்புற்றிருக்க விரும்பினர் என்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் வழி அறிய முடிகின்றது.

'பூமிக்கு மரியாதை"

இன்று புவியானது நமது அக்கறை-யின்மையாலும், சுயநலத்தாலும் எண்ணவியலாத விதத்தில்

சீர்கேடு அடைந்துள்ளது.காடுகள் அழிப்பு, தொழிற்சாலைப்பெருக்கம், வாகனங்கள் அதிகரிப்பு போன்றவையும், பூச்சி கொல்லி பயன்பாடும் நாம் வாழும் புவியை நஞ் சாக்கிக் கொண்டிருக்கின்றன. அதிகப்படியான அறிவியல் முன்னேற்றம், விரைவான வாழ்வு வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக நம் கண்களை அடகுவைத்து சித்திரம் வாங்குவது

போன்றதுதான், இத்தகைய செயல்பாடும்.

பெருகும் கார்பன் மோனாக்சைடு புவியின் கழுத்தை சுருக்கிவிடுகிறது என்பதும், வேதியியல் கழிவும், பூச்சி கொல்லிகளும் நிலத்தின் ரத்த ஓட்டத்தில் விஷத்தைக் கலக்கிற தென்பதும், நம்மை வாழவைக்கும் புவிக்கு எவ்வித மரியாதையை நாம் தந்திருக்கிறோம் எனும் வலி மிகுந்த கேள்வியை நம் முன் வைக்கிறது.

'நிலம் மீட்கும் முயற்சி'

குளம் தொட்டு வளம் பெருக்கிய அறவோரான நம் முன்னோரின் இயற்கைப்பாதுகாப்பும், தாவர

இனங்களைக் காத்து வளர்த்ததும் நாலடியாரில் குறிப்பிடப்பட்டிருப்பது இயற்கையுடன் அவர்கள் கொண்டிருந்த மனித நேயத்தை வெளிப்படுத்துகிறது." துறைஇருந்து ஆடை கழுவுதல் இன்னா" என்று நீர் அருந்தும் துறையில் ஆடை துவைத்தல் கூடாது என்னும் ஒழுகலாறினைக் கூறிய, பின்பற்றிய நம் சமூகம் புவியைக் காக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டிய தருணமாக இன்றைய பூமி தினம் அமைய வேண்டும்.

நிலத்தின் வளத்தை சீரழிக்கும் தைல மரம், சீமைக் கருவேலங் காடுகளை அகற்றி, நாட்டு மரங்கள் கொண்ட காடுகள் உருவாக்குதல், மழை நீர் பெருக்கத்திற்கு ஏற்ற மரங்கள் நடுதல் அவசியம். மழைநீர் சேமிப்புத் திட்டங்களும் அவற்றைச் செயல் படுத்தும் மக்கள் கரங்களிலேயே புவியின்

தலைவிதியோடு மனிதனின் நிலையும் தீர்மானிக்கப்படுகிறது.

ஆற்றினை, அதன் நீரினை, மணலினைச் சுரண்டும் சுயநலப்பதர்களிடம் இருந்து, புவியை விடுவிப்பது தற்போதைய வறட்சி-யினின்று வளத்தை மீட்டெடுப்பது, பூமிக்கு நாம் செய்யும் ஆக்கம் மட்டும் அல்ல; விஷமாகிப்போன நீர், நிலம், காற்றிடம் இருந்தும் நம்மைப்பாதுகாக்கும் முயற்சியாகும்.

புவி தோன்றியது முதல், உயிரினங்கள் அனைத்தையும் அரவணைத்து வாழ்விக்கும் பண்பை ஏற்று இயங்குகிறது. இயற்கையின் அரவணைப்பில் உண்டு, களித்து, உறங்கிக் கிடந்த மனிதன், பிற்காலங்களில் மேற்கொண்ட அறிவியல் கண்டுபிடிப்பின் விளைவும், அறிவுப்பெருக்கமும் இயற்கையை சிறிது சிறிதாகச் சிதைக்கத் துவங்கியது.

நிலவளம் காப்பாற்ற "வரப்புயர" உயிர் வேலிகள் அமைத்து, பல மர விவசாய முறையில் பூமி தாய்க்கு "பசுமைப் போர்வை" அணிவித்து மரியாதை செலுத்துவோம்.

# விஜயகாந்த் நினைவிடத்திற்கு உலக சாதனை விருது




தமிழ் சினிமாவில் 1970களின் பிற்பகுபதி, 80, 90 மற்றும் 2000களில் முன்னணி நடிகராக வலம் வந்தவர் விஜயகாந்த். தமிழ் சினிமாவில் சுமார் 150-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார் விஜயகாந்த். பெரும்பாலும் போலீஸ் கதாபாத்திரங்களில் நடித்துள்ள விஜயகாந்த் , அந்த பாத்திரங்களில் கச்சிதமாக பொருந்தியிருப்பார்.

பிறமொழிகளில் நடிக்காத நடிகர் என்று பெருமைக்கும் உரியவர் நடிகர் விஜயகாந்த். ஆனால் அவர் நடித்த ஏராளமான படங்கள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நடிகர் விஜயகாந்தை, அவரது ரசிகர்கள் கேப்டன் என்று அன்போடு அழைத்து வந்தனர். தொடர்ந்த அரசியலில் தடம்பதித்த நடிகர் விஜயகாந்த் கடந்த 2005 ஆம் ஆண்டு தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்ற கட்சியை துவங்கினார்.

விருத்தாச்சலம் மற்றும் ரிஷிவந்தியம் தொகுதிகளில் இரண்டு முறை எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டார் விஜயகாந்த். 2011 ஆம் ஆண்டு அதிமுகவுடன் கூட்டணி வைத்த விஜயகாந்த் தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத தலைவராக உருவெடுத்தார். இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நடிகர் விஜயகாந்த், பின்னர் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்த்து வந்தார்.

உடல்நலக்குறைவால் வெளிநாடுகளிலும் சிகிச்சை பெற்று வந்தார் விஜயகாந்த். இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம் உடல் நலக்குறைவால் காலமானார். அவரது இறுதிச்சடங்கில் ஏராளமானோர் பங்கேற்றனர். விஜயகாந்தின்




உடல் சென்னை கோயம்பேட்டில் உள்ள அவரது கட்சி தலைமை அலுவலகமான தேமுதிக அலுவலகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

விஜயகாந்தின் நினைவிடத்திறகு நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். விஜயகாந்தின் நினைவிடத்தில் நாள்தோறும் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் விஜயகாந்தின் நினைவிடத்திற்கு உலக சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது. மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த் நினைவிடத்தில் 125 நாட்களில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அஞ்சலி செலுத்தி உள்ளனர்.

விஜயகாந்தின் நினைவிடத்திடத்திற்கு லிங்கன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் சார்பில் உலக சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது. பார்வையாளர்களுக்கு உணவு வழங்கும் உலகின் முதல் நினைவுச்சின்னமாக விஜயகாந்தின் நினைவுச்சின்னம் போற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விஜயகாந்தின் நினைவிடத்தில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com


PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338

# போலி ஐஎஸ்ஐ முத்திரை பயன்படுத்திய பேக்கேஜ் செய்யப்பட்ட குடிநீரா?

## அதிகாரிகள் அதிரடி சோதனை!

பொன்னேரி தாலுகா, சோழவரம் தொகுதி, அலமாதி கிராமத்தில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத குடிநீர் பாட்டில் தொழிற்சாலை இந்திய தர நிர்ணயச் சட்டம், 2016-ஐ மீறுவதாக சந்தேகிக்கப்படும் தகவலின் அடிப்படையில், 2024, மே 1 அன்று இந்திய தர நிர்ணய அமைவன (பிஐஎஸ்), சென்னை கிளை அலுவலகத்தின் அதிகாரிகள் சட்ட அமலாக்கத் தேடல் மற்றும் பறிமுதல் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.




இந்த நடவடிக்கையின் போது போலியான ஐஎஸ்ஐ முத்திரையுடன் குடிநீர் நிரப்பப்பட்ட 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட 1,782 பாட்டில்கள், ஒரு லிட்டர் கொள்ளளவு கொண்ட 11,616 பாட்டில்கள், 500 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட 9,600 பாட்டில்கள், 300 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட 10,465 பாட்டில்கள்






கைப்பற்றப்பட்டன. மேலும், போலியான ஐஎஸ்ஐ முத்திரை பொறிக்கப்பட்ட சுமார் 2,58,000 லேபிள்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கையில் இந்திய தர நிர்ணய அமைவனத்தின் இணை இயக்குநர் திரு ஸ்ரீஜித் மோகன், துணை இயக்குநர் திரு தினேஷ் ராஜகோபாலன் மற்றும் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இந்த நிறுவனத்தின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிஐஎஸ் சென்னைக் கிளை அலுவலகத் தலைவர் திருமதி ஜி.பவானி தெரி-வித்தார். இந்தக் குற்றத்திற்கு முதல் மீறலுக்கு 2 ஆண்டுகள் வரை சிறைதண்டனை அல்லது ரூ.2 லட்சத்திற்குக் குறையாத அபராதம் விதிக்கப்படும் என்றும் அல்லது பயன்படுத்தப்படும் பொருட்கள், தயாரிக்கப்பட்ட அல்லது ஒட்டப்படும் பொருட்களின் மதிப்பில் 10 மடங்கு வரை அபராதம் நீட்டிக்கப்படலாம்.

இது போன்ற விதி மீறல் தகவல்கள் பொதுமக்களுக்கு தெரியவந்தால், பிஐஎஸ் சென்னை கிளை அலுவலகம், சிஐடி வளாகம், 4-வது குறுக்கு சாலை, தரமணி, சென்னை-600 113 என்ற முகவரிக்கு தகவல் தெரிவிக்கலாம். அல்லது BIS Care செயலியைப் பயன்படுத்தியோ அல்லது cnbo1@bis.gov.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமாகவோ தெரிவிக்கலாம். தகவல்களின் ஆதாரம் கண்டிப்பாக ரகசியமாக வைக்கப்படும்.


RS PRINTZY
DTP
தமிழ்
&
ENGLISH
DESIGN
NEWSPAPER
MAGAZINE
NOVEL BOOKS
BILL BOOKS
LETTER PAD
ALL TYPE
ID CARDS
V-CARDS
PVC CARDS
STICKERS
LOGO DESIGN
PAMPHLET
FLEX / VINYL
WEDDING CARDS
POSTER
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097.
8754582123, 9962245338, 044-35906002
Email: rsprintzy@gmail.com

**PENA KURAL,** Tamil Monthly - May 2024
Registrar of Newspapers for India - Registered No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**

